| | |
|---|---|
| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
| திகதி | 2021 ஏப்பிறல் 23 |

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்**

மிகவும் வசதியாக வியாபாரம் செய்வதனூடாக ஆர்வலர்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் வசதிப்படுத்துவதுடன் இணைந்து எல்லை கடந்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதில் அதிக வினைத்திறனை அடையும் நோக்குடன் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மேலும் எளிதாக்கி தெளிவினை மேம்படுத்துவதற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு இத்திருத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கைக் கட்டமைப்பானது **2021 மாச்சு 22**ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனையவற்றிற்கு மத்தியில் அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு.

i. இலங்கை அரசாங்கம் அத்துடன் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு கடன்கள் வழங்குகின்ற போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள்/ கடன்வழங்குநர்கள் மூலம் உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் (Inward Investment Accounts) திறப்பதற்கான கட்டாயத் தேவைப்பாட்டினை நீக்குதல்.

ii. இலங்கையில் வதிகின்ற ஆட்கள் மூலம் வெளிநாடுகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகளை வசதிப்படுத்துவதற்கு 'வெளிநாட்டு வர்த்தகரீதியான கடன்படுதல் கணக்கு' (External Commercial Borrowing Account), என்ற பெயரிலான புதிய கணக்கொன்றினை அறிமுகம்செய்தல்.

iii. இலங்கைக்கு வெளியிலுள்ள அவற்றின் தாய்க் கம்பனிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான (கிளை அலுவலகம், ஒருங்கிணைப்பு அலுவலகம், கருத்திட்ட அலுவலகம் போன்றன) பொதுவான அனுமதி.

iv. உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக நிதியங்களை அனுப்புவதற்குப் பதிலாக இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படுகின்ற கணக்குகள் ஊடாக நிதியங்களை அனுப்புவதன் மூலம் இலங்கையில் கூட்டிணைக்கப்படாத மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் அல்லது படுகடன் பிணையங்களில் முதலிடுவதற்கு இலங்கையில் வதியாத முதலீட்டாளர்களுக்கான பொதுவான அனுமதி.

v. புலம்பெயர்ந்தோரின் நடப்பு வருமானத்தை சொந்தநாட்டிற்கு அனுப்பும் நோக்கத்திற்காக 'புலம்பெயர்ந்தோரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு' (Emigrant's Remittable Income Account) என்ற பெயரிலான துணைக் கணக்கொன்றினை அறிமுகப்படுத்தல்.

vi. வதியாதோர் ரூபாய்க் கணக்குகளிலும் மூலதன கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகளிலும் வைத்திருக்கப்படும் நிதியங்களிலிருந்து இலங்கையில் முதலிடுவதற்கு புலம்பெயர்ந்தோர்களுக்கு அனுமதியளித்தல்.

vii. இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் இலங்கைக்கு வெளியில் வெளிநாட்டுச் செலாவணியினை உழைத்த/ பெற்றுக்கொண்ட இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கான அத்துடன் இலங்கைக்கு வெளியில் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனமொன்றுடன் கணக்கொன்றினைத் திறந்து, பேணி அத்துடன் தொழிற்படுத்துவதற்கு வெளிநாடுகளிலிருந்து கடன்பெறுவதற்குத் தகைமையுடைய இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கான பொதுவான அனுமதி.

viii. இலங்கை ரூபாய்களில் ஈட்டப்படும் நிதியங்களை வரவுவைப்பதற்கும் உள்நாட்டில் பகிர்ந்தளிப்பதற்கும் இலங்கை ரூபாய்க் கணக்குளைத் திறந்து பேணுவதற்கு இலங்கைக்கு வெளியில் தொழில்பெற்றுள்ள இலங்கையர்களுக்கான (புலம்பெயர்ந்தவர்கள் தவிர) பொதுவான அனுமதி.

ix. இலங்கையில் எவையேனும் வேறு எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அத்துடன் தனியாள் உரிமைத்துவத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு அல்லது பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கு மூன்று புதிய தகைமையுடைய வதிவோர் முதலீட்டாளர் வகைகளை அறிமுகப்படுத்தல்.

x. பயண கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தை புதிய அல்லது ஏற்கனவேயுள்ள தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு அனுமதித்தல்.

மேலதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து **2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/34 - 39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினைப்** பார்வையிடவும் அத்துடன் **www.dfe.lk** என்ற வலைத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **011-2477255/433/207/375** என்ற தொலைபேசி இலக்கங்களூடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினைத் தொடர்புகொள்ளவும்.